# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 074/ந/2018

ஆணை எண். 92/2018

நாள் : 06/04/2018

**திருமதி M. ராஜகுமாரி,**
**திருவண்ணாமலை – 606 601.** – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருவண்ணாமலை நகராட்சி,
**திருவண்ணாமலை – 606 601.** – எதிர் மனுதாரர்

திருவண்ணாமலை, குமரன் கோவில் தெரு, 07 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி M. ராஜகுமாரி அவர்களின் 02.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 074/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருவண்ணாமலை, குமரன் கோவில் தெரு, 07 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி M. ராஜகுமாரி என்பவர், திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட நகர நில அளவை பழைய எண். 1853/22 B1 நிலத்தில் திரு V. மோகன் என்பவர் 900 சதுர அடி நிலத்தை கிரயம் பெற்று, அந்நிலத்தில் கட்டட அனுமதி மற்றும் வரைபட ஒப்புதல் பெறாமல் பகுதி நிலத்தில் கடைகள் கட்டப்பட்டுள்ளன என்றும், அக்கடைகளுக்கு சொத்துவரி பெயர் மாற்றம் விதிகளுக்குப் புறம்பாக செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். எனவே, சட்டத்திற்குப் புறம்பாக கிரயம் பெற்ற நிலத்தில், நகராட்சி அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு நகராட்சி வரிவிதிப்பு செய்தது முறையற்றது எனத் தெரிவித்து, அவ்வரிவிதிப்பினை நீக்கம் செய்ய ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இந்நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட புல எண் நிலம் உட்பட பழைய சர்வே எண்.1853/1 A1–இல் உள்ள 62 செண்ட் நிலத்திலும் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்கள் குறித்து 1033/2018 எண்ணிட்ட நீதிப்பேராணை மனு ஒன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாக அறிய நேரிடுகிறது. எனவே, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி

அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 10 (3) (b)–இன் கீழ் நீதி மன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணை செய்தல் கூடாது. மேலே கூறப்பட்ட சூழ்நிலையில், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டினை இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்க இயலாது எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், **6**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

**1.** **திருமதி M. ராஜகுமாரி,**
**எண்.7, குமரகோவில் தெரு,**
**திருவண்ணாமலை – 606 601.**

**2.** **நகராட்சி ஆணையர்,**
**திருவண்ணாமலை நகராட்சி,**
**திருவண்ணாமலை.**

**நகல் :** முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
**இ.கோ. / உதிரிகள்**